**O.S.No. 139/2016**

**Date: 19.09.2024**

**வா.சா.1 மாசிலாமணி**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது தகப்பனார் பெயர் சாமுவேல், தாயார் பெயர் செல்வத்தம்மாள் என்றால் சரிதான். மேற்படி தம்பதிகளுக்கு நாங்கள் ஐவர் வாரிசுகள் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி சைமன், வேதநாயகம், ஆசிர்வாதம், மாசிலாமணி, அசரியா ஆகியோர் ஆவோம். வழக்கு சொத்துக்கள் எனது தாய் தகப்பனாருக்கு பாத்தியப்பட்டது. வழக்கில் கண்ட 16 வது அயிட்ட சொத்து ஹாலோபிளாக் பேக்டரி வைத்து நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். அதில் மாட்டு தொழுவம் உள்ளது. அதே இடத்தில் 4ம் பிரதிவாதி ஒரு வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான். 16 அயிட்ட சொத்திற்கு தெற்கே உள்ள பழங்கோட்டை கிராமத்தில் மற்ற அயிட்ட சொத்துக்கள் உள்ளது என்றால் சரிதான். மேற்படி பழங்கோட்டை கிராமத்தில் மற்ற அயிட்ட சொத்துக்களில் 4ம் பிரதிவாதி எலும்மிச்சை போட்டுள்ளார் என்றால் பொதுவாக தான் உள்ளது. எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட எலுமிச்சை வாடிவிட்டது. எனது தகப்பனார் 20வ ருடங்களுக்கு முன்னர் எலுமிச்சை பயிரிட்டு இருந்தார். மேற்படி இடத்தில் ஒரு கிணறு இருந்தது என்றால் சரிதான். அந்த கிணற்றில் இருந்து ஹாலோபிளாக் பேக்டரிக்கு தண்ணீர் எடுப்பது தொடர்பாக எனக்கும் 2ம் பிரதிவாதிக்கு ம் பிரச்சனையா என்றால் இல்லை அசரியாவிடம் இருந்து சொத்தை பெற்றதற்கு தான் பிரச்சனை. நீதிமன்றம் மூலமாக ஆணையர் சென்றால் பழங்கோட்டையில் கிராமத்தில் உள்ள சொத்தில் எலும்மிச்சை இருப்பது தெரியவருமா என்றால் தெரியவரும். ஹாலோபிளாக் பேக்டரிக்கு பழங்கோட்டை கிராமத்திற்கு தெற்கே உள்ள இடத்தில் இருந்து தண்ணீர் எடுத்து வருகிறேன். பழங்கோட்டை கிராமத்தில் உள்ள கிணற்றில் இருந்து தெற்கு குருவிகுளம் கிராமத்திற்கு தண்ணீர் பாய்ச்சுவதற்கு பாத்தியதை கிடையாது என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.